**இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இல. 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் வங்கி மேலதிகப்பற்றை பெற்றிருக்கவில்லை. அதன் பிரதான கணக்கின் விபரங்கள் மற்றும் நிதி | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படக்கூடாத போதிலும் ரூபா 67,021,766 தொகையான வங்கி மேலதிகப்பற்று காசு மீதிக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | முகாமைத்துவ கணக்குகளுக்கு இடையிலான தொடர்பு குறிப்பு இல. 02.11 இல் காட்டப்பட்டுள்ளது. பணியகத்தால் காசோலைகள் வழங்கப்படும் போது அதற்கான பணம் தானாகவே நிதி முகாமைத்துவ கணக்கிலிருந்து வங்கியின் பிரதான கணக்கிற்கு மாற்றப்பட்டு குறைந்தபட்சத் தொகை பேணப்படும். இதன் பிரதான நோக்கம் தீர்வு செய்யப்படாதிருந்த பிரதான நடைமுறைக் கணக்கில் உள்ள பணம் தானாகவே இந்தக் கூட்டுக் கணக்கிற்கு நாளாந்தம் அனுப்பப்பட்டு அதன் பின்னர் வட்டியை ஈட்டுதலாகும். 2021 ஆம் ஆண்டில் அவ்வாறு ஈட்டிய வட்டி வருமானம் ரூபா 6,081,183 ஆக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் பணியகம் வங்கி மேலதிகப்பற்றை பெற்றிருக்காததுடன் அந்த இரண்டு கணக்குகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை என அறிவிக்கப்பட்டுள்ளது. | இணங்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுடனொன்று ஈடுசெய்யப்படக்கூடாது. |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு தூதுவராலயங்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் | 44,058,829 | 7,459,607 | 36,599,222 | வெளிவிவகார அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிறுவனம் நேரடியாக ஈடுபடாமல், வெளிவிவகார அமைச்சின் ஊடாக, மீதிகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | கணக்காண்டு இறுதியில் உள்ளவாறான மீதிகள் தூதுவராலயங்களில் இருந்து பெறப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுற்றுலா | 80,305,873 | 124,913,509 | 44,607,636 | இந்த வேறுபாட்டிற்கான | நிறுவனங்களுக்கு இடையேயான |

| | | | |
|---|---|---|---|
| அபிவிருத்தி அதிகாரசபை பக்கு செலுத்த வேண்டிய தொகை | | முக்கிய காரணம், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தால் வழங்கப்பட்ட ரூபா 6,054,536.60 பெறுமதியான கட்டிட வாடகை மற்றும் காசோலை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பெறவேண்டிய மீதியாக காட்டப்படுவதே ஆகும். | பெறவேண்டிய/ செலுத்த வேண்டிய கணக்குகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரை நிலுவையாக இருந்த ரூபா 3,778,427 கூட்டுத்தொகையான அட்டுறு செலவினங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீரப்பனவு செய்யப்படவில்லை. எனினும், மேலதிக பொறுப்புக்களை ஏற்படுத்த முடியாத மீதிகளை சரிபார்த்த பின்னர் வருமானத்திற்கு எதிராக அத்தகைய மீதிகளை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை ஏற்கனவே ரூபா 2,346,114.28 வரை குறைக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள மீதிகளையும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அட்டுறு செலவினங்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கும், வருமானத்திற்கு எதிராக மேலும் பொறுப்புக்களை ஏற்படுத்த முடியாத மீதிகளை பதிவழிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 பெப்ரவரி 28 இல் சீன நிறுவனமொன்றுடன் அந்நாட்டின் விளம்பர நிகழ்ச்சித்திட்டத்திற்காக செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 25,006,463 (ஐ.அ.டொலர் 137,600) முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நிகழ்ச்சித்திட்டம் | ஈஸ்டர் தாக்குதலால் சீனாவின் விளம்பர நிகழ்ச்சித்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டு, அதுவரை பூர்த்தி செய்யப்பட்ட பணிகள் உள்ளகக் குழுவால் கணிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. ரியாத் பயண கண்காட்சி 2020 தொடர்பான இட ஒதுக்கீட்டிற்காக செலுத்தப்பட்ட பணத்தை பணியகத்திற்கு மீள்நிரப்பு | நிகழ்ச்சிகள் நடைபெறாததால் முற்பணங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதியில் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், மத்திய கிழக்கில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த “ரியாத் பயண கண்காட்சி 2020” என பெயரிடப்பட்ட விளம்பர நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பாக 2019 ஆம் ஆண்டில் ரூபா 8,120,991 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் கொவிட் சூழ்நிலை காரணமாக அந்த நிகழ்ச்சித்திட்டம் பிற்போடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த நிகழ்ச்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அல்லது முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கு அல்லது எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான இறுதித் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு நாணயத்தில் தூதுவராலயங்களிற்கு அனுப்பப்பட்ட ரூபா 2,030,236 தொகையான முற்பணங்கள் விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்காததால் ஆண்டு இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய முடியவில்லை. மேலும் நிலுவையாக உள்ள காலப்பகுதி 29 மாதங்கள் முதல் 49 மாதங்கள் வரையான வீச்சில் இருந்தது. | எனவே, இந்த முற்பணங்களை நேரடியாகத் தீர்ப்பனவு செய்வதில் நிறுவனம் ஈடுபட முடியாது. வெளிவிவகார அமைச்சின் ஊடாக பெறவேண்டிய பணம் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2010 இல் வழங்கப்பட்ட ரூபா 1,575,000 தொகையான முற்பணத்தை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு அனுப்பிய பின்னர் உள்ளூர் முற்பணங்கள் தொடர்பாக பரீட்சிப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு உத்தரவிடப்பட்டு, தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பந்தியின் 09 ஆம் உபபிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் முடிவடையும் முன்னர் ஆண்டின் செயற்பாடுகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைக்கப்பட்டவாறு எதிர்காலத்தில் அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் அமைச்சருக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 102 மற்றும் 104 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் ரூபா 308,700 பெறுமதியான மூன்று மடிக்கணினிகள் தவறவிடப்பட்டமை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சம்பவத்தை மீண்டும் சரிபார்த்து நிதிப் பிரமாணங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தவறவிடப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2006 பெப்ரவரி 21 ஆம் திகதிய CSA/2/3/4 ஆம் இலக்க சனாதிபதியின் சுற்றறிக்கை | (i) அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் ஒன்றாக வெளிநாடு செல்லக்கூடாது என அறிவிக்கப்பட்ட போதிலும் 2021 ஒக்தோபர் 05 முதல் 08 வரை பிரான்சில் நடைபெற்ற ஊக்குவிப்பு நிகழ்ச்சியில் இருவரும் பங்குபற்றியிருந்ததுடன் அதற்கான விசேட காரணம் எதுவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவர்கள் இருவருக்கும் | சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் ஊக்குவிப்பு பணியகத்தின் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரம் மற்றும் சனாதிபதி செயலாளரின் அங்கீகாரத்தை பெற்று உரிய கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தங்குமிடம், இடைநேர் செலவின படிகள் மற்றும் விமானச்சீட்டுக்களாக ரூபா 2,535,970 செலவினம் பணியகத்தின் பணத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | வெளிநாட்டுப் பயணங்களுக்கான பங்கேற்பு குறைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்ட போதிலும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றுலா ஆலோசனைக் குழுவின் இணைப்பாளர், அமைச்சரின் ஊடகப் பிரிவின் தலைவர், சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் பிரதித் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் பிரான்ஸ், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் நடைபெற்ற ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருந்ததுடன் அவர்களுக்கான தங்குமிடம், இடைநேர் செலவின படிகள் மற்றும் விமானச் சீட்டுக்களாக ரூபா 7,135,173 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | சனாதிபதியின் செயலாளர் 2021.10.01 ஆம் திகதிய அவரது கடிதத்தில் வழங்கிய அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | பயண நேரம் உட்பட பங்கேற்கும் நேரம் அவசியம் குறைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்ட | இந்த ஊக்குவிப்பு நிகழ்ச்சியில் சுற்றுலா ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர், அமைச்சின் | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றுலா ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர், அமைச்சரின் ஊடகப் பிரிவின் தலைவர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதித் தலைவர் 2021 செப்தெம்பர் 06 முதல் 10 வரை ரஷ்யா மற்றும் உக்ரைனில் இடம்பெற்ற ஊக்குவிப்பு நிகழ்ச்சிக்காக 7 நாட்களுக்கு முன்பு பங்கேற்றிருந்தனர். மேலும் அவர்களுக்காக தங்குமிடம் மற்றும் இடைநேர் செலவின படிகளாக ரூபா 2,363,017 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செயலாளர், ஒருங்கிணைப்புச் செயலாளர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் பங்கேற்க வேண்டும் என 2022.09.22 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மேலும், 2021.10.02 அன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 5 நபர்களுக்கான ரூபா 3,387,300 தொகையான பங்கேற்பாளர்களின் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் சேர்த்து மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 8,860,500 ஆக காணப்பட்டது. எனினும், உண்மையான பங்கேற்பு கிரயம் ரூபா 6,554,910 செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்குகள் 147 நாட்கள் தாமதமாக 2022 யூலை 25 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன | இணங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | 2015 மார்ச் 26 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் பண்டிகை முன்பணமாக ரூபா 10,000 செலுத்த முடிந்த போதிலும் இது அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 25,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 78 ஊழியர்களுக்கு விழா | செயலாளரிடமிருந்து மிகையூதியத்திற்கான அங்கீகாரத்திற்காக கோரிக்கையை அனுப்பிய போது அனைத்து ஊழியர்களுக்கும் விழா முற்பணமாக ரூபா 25,000 கொடுப்பனவை வழங்குவதற்கு செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்பணமாக ரூபா 1,170,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | து. விழா முற்பணத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரையும் அங்கீகாரமும் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 649,371,283 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 328,088,281 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 321,283,002 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி வரியிலிருந்தான வருமானம் ரூபா 192,847,570 ஆல் அதிகரித்தமை மற்றும் வியாபார செலவினம் ரூபா 108,922,280 ஆல் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணியகத்தின் வர்த்தக முத்திரை தற்போது ‘‘So Sri Lanka’’ ஆக உள்ளதுடன் 2018 ஆம் ஆண்டு வரை வர்த்தக முத்திரை ‘‘ஆசியாவின் அதிசயம்’’ ஆகும். அதன் பிரகாரம் ‘‘ஆசியாவின் அதிசயம்’’ முத்திரையுடன் கூடிய ஒவ்வொன்றும் ரூபா 4,300 பெறுமதியான 398 கொடிகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை எதற்கும் பயன்படுத்தப்படாமல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 1,711,400 ஆகும். | ”ஆசியாவின் அதிசயம்” என்ற வர்த்தக முத்திரையுடன் கூடிய கொடிகள் பணியகத்தால் விளம்பர நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும், முகாமைத்துவத்தின் தீர்மானத்தினால் ”So Sri Lanka” என வர்த்தக முத்திரை மாற்றப்பட்டதால், இந்தக் கொடிகளைப் பயன்படுத்த முடியாதுள்ளது. | தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றின் கிரயத்தை இனங்காண முடிந்திராத 38 வெப் கேமராக்கள் மீளாய்வாண்டின் இறுதித் | இந்த கேமராக்கள் 2010 ஆம் ஆண்டில் IIFA விழாவிற்காக கட்டளையிடப்பட்டு, விழா முடிவடைந்த பின்னர் களஞ்சியங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. இந்த | நிறுவனத்தின் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதி வரை பயன்படுத்தப்படாமல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. | கேமராக்களை பயன்படுத்தலாமா அல்லது வேண்டாமா என்பதை சரிபார்க்க தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையைப் பெற்ற பின்னர் இந்த கேமராக்களை பயனுள்ள வேலைக்குப் பயன்படுத்தலாம். சரிபார்ப்புக் குழுவினர் இந்த கேமராக்களை கண்காணித்து அறிக்கைகளிலும் சேர்த்துள்ளனர். | |

## 3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவை ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைப்பாளருக்கு திணைக்களத்தின் தலைவர் அல்லது சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு நிகரானதாகக் கருதி மாதாந்தம் 140 லீற்றர் எரிபொருள், ஒரு வாகனம் மற்றும் சாரதியொருவர் வழங்கப்பட்டு மீளாய்வாண்டில் வாகன வாடகை, எரிபொருள், சாரதியின் சம்பளம், மேலதிக நேரம் மற்றும் மற்றும் வாழ்வாதாரக் கொடுப்பனவு என ரூபா 2,874,290 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஆலோசனைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு எந்த உத்தரவாதமும் கிடைக்கவில்லை. | கடமைகளை வழங்குதல் மற்றும் நிறைவேற்றப்பட்ட கடமைகளை உறுதிப்படுத்துதல் என்பன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன் செலவினங்களை மீள்நிரப்பு செய்தல் மாத்திரமே பணியகத்தால் செய்யப்பட்டது. மேலும், இது தொடர்பான கோவைகள் அமைச்சால் பேணப்படுவதால் மேலதிக தகவல்களுக்கு அமைச்சிடம் விசாரிப்பது சிறந்ததாகும். | செலவினங்கள் மீள்நிரப்பு செய்யப்படும் போது, பணியகத்தால் வருமானமும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஒக்தோபர் 05 முதல் 08 வரை பிரான்சில் நடைபெற்ற ஊக்குவிப்பு நிகழ்ச்சிக்கு இணையாக 2021 ஒக்தோபர் 06 இல் விளம்பர மாலையொன்றும் நடாத்தப்பட வேண்டும். எனினும், அமைச்சர் வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் அன்று மாலையை நடாத்தாமல் 2021 நவம்பர் 09 இல் இது மீண்டும் நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் சுற்றுலா அமைச்சர், சுற்றுலா ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஊக்குவிப்பு | குளிர்காலத்திற்காக ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் மற்றும் பிரான்ஸ் எயார் லைன்ஸ் இணைந்து நேரடி விமானச் செயற்பாடுகளை திட்டமிட்டிருந்தன. சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கையை மேம்படுத்தும் நோக்கில் இந்த அறிமுகத்திற்கு இணையாக, இந்த விளம்பர மாலை 2021.10.06 இல் நடாத்தப்படுவதற்கு | ஊக்குவிப்பு நிகழ்ச்சியுடன் ஒரே நேரத்தில் விளம்பர மாலை நடாத்தப்பட்டிருந்தால் மேலதிக செலவினங்களைத் தவிர்த்திருக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| | பணியகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றியதால் ரூபா 2,999,699 மேலதிக செலவினம் ஏற்பட்டிருந்தது. ஊக்குவிப்பு நிகழ்ச்சிக்கு இணையாக சுற்றுலா விளம்பர மாலையை நடாத்தியிருந்தால், இதுபோன்ற செலவினங்களை தவிர்த்திருக்கலாம். | தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஆ) | 2006 இன் பெறுகை வழிகாட்டலுடன் இணைத்து பயன்படுத்தப்பட வேண்டிய 2020 மார்ச் 25 ஆம் திகதிய பிற்சேர்க்கை 32 இன் 2.14.1 ஆம் பந்திக்கு முரணாக 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2021 ஒக்தோபர் 06 முதல் 10 வரை ரஷ்யா மற்றும் உக்ரைனில் நடைபெற்ற விளம்பர நிகழ்ச்சியை கையாள்வதற்கு முகவராண்மையொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பெறுகை செயன்முறையிலிருந்து விலகுவதற்கான காரணங்களை குறிப்பாகக் குறிப்பிடாமல் நிகழ்ச்சிகளை கையாள்வதற்காக முகவராண்மையொன்றிற்கு ரூபா 10,956,871 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2021.03.31 இன் TIP/A/SLTPB/21/AQ/06 ஆம் இலக்க கடிதத்திற்கு 2021.06.16 இல் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டலுடன் இணைத்து பயன்படுத்த வேண்டிய பிற்சேர்க்கையுடன் இணங்குதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டை உள்ளடக்கிய மூலோபாய திட்டமொன்றை பணியகம் தயாரித்திருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் அடைந்துகொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்கள் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் | கொவிட் தொற்றுநோய் நிலைமை சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் பெரும் தடையாக இருந்ததுடன் மூலோபாய திட்டம் மற்றும் வேலைத் திட்டத்தை தயாரிப்பதில் சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திற்கு இடையூறு ஏற்பட்டது. இந்த நிலைமை தற்போது சாதாரணமாகிவிட்டதால், 2022- | மூலோபாயத் திட்டமும் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நோக்கங்களைத் தெளிவாகக் இனங்கண்டு கொள்ளும் செயல்நடவடிக்கை திட்டமும் அவசியமாகும். |

| | |
|---|---|
| காட்டப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பணியகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதை நோக்கி இயக்கப்பட்டிருக்கவில்லை. பணியகத்தின் மொத்த செலவினத்தில் 71 சதவீதம் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய முன்னுரிமைப் பகுதிகளை இனங்காண்பதற்காக மீளாய்வாண்டுக்கான சந்தைப்படுத்தல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இற்கான மூலோபாய செயல்நடவடிக்கைத் திட்டமும், கூட்டிணைந்த திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன. |